அரசு

**சுருக்கம்**

பணியமைப்பு - நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) தெருவிளக்கு பராமரிப்பு பணியாளர்களுக்கு அளவுகோல் நிர்ணயம் செய்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.ப.3) துறை

அரசாணை (நிலை) எண். 70 நாள். 5.5.1998

படிக்கப்பட்டது

நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் எண் 54977/97/ப3 நாள் 1.10.97 மற்றும் 17.2.98

ஆணை:

---

நகராட்சிகளில் உள்ள தெருவிளக்குகளை பராமரிக்கும் பணி 9.6.89 நாளிட்ட ந.நி.கு.வ துறை அரசாணை (நிலை) எண் 344-ல் குறிப்பிட்டுள்ளபடி மின்சார வாரியத்திலிருந்து மாற்றி அந்தந்த நகராட்சியின் வசம் ஒப்படைக்கப்பட்டது. அவசர நிலையைக் கருத்திற்கொண்டு, அரசு ஆணையை எதிர்நோக்கி, தெருவிளக்கு பராமரிப்பிற்காக 600 தெருவிளக்குகளுக்கு ஒரு மின் கம்பியாளர் ரூ.825-1200 என்ற ஊதிய விகிதத்திலும் மற்றும் ஒரு உதவியாளர் ரூ.750-940 என்ற ஊதிய விகிதத்திலும் தோற்றுவித்துக்கொள்ள நகராட்சிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி அளித்தார். நகராட்சிகளில் தெருவிளக்கு பராமரிப்பிற்காக மின்கம்பியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்க அனுமதி அளித்த நகராட்சி நிர்வாக ஆணையரின் செயலுக்கு, அரசு 26.3.92 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 68-ல் பின்னேற்பு அளித்து ஆணை பிறப்பித்தது. நகராட்சி நிர்வாக ஆணையர், தெருவிளக்கு பராமரிப்பு பணியாளர்களுக்கு அளவுகோல் நிர்ணயம் செய்ய அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார். அரசு, நகராட்சி நிர்வாக ஆணையர் செயற்குறிப்பினை கவனத்துடன் பரிசீலித்து அதனை ஏற்றுக்கொண்டு நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) தெருவிளக்கு பராமரிப்பிற்கான பணியிடங்களுக்கு கீழ்க்கண்டவாறு அளவுகோல் நிர்ணயம் செய்து ஆணையிடுகிறது.

நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (சென்னை மாநகராட்சி நீங்கலாக)

---

பணியிடங்கள் மற்றும் அளவுகோல்

---

1 மின் கம்பியாளர் (Wireman) ()
1 உதவியாளர் (Helper) () 600 தெருவிளக்குகளுக்கு

கல்வித்தகுதி

---

மின்கம்பியாளர் (Wireman) - ஐ.டி.ஐ. தொழிற்கல்வி சான்று
உதவியாளர் (Helper) - 8-ம் வகுப்பு தேர்ச்சி

2.அளவுகோலின்படி நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) மின்பணியாளர் பணியிடங்களை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

(1)அளவுகோலின்படி நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) மின்பணியாளர்கள் நியமனம் செய்யவேண்டு மெனில் பணியாளர்களுக்கான செலவினத்தை நகராட்சி மற்றும் மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள ஒப்புதலளித்து அந்நகர் மன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

(2)நகர்மன்றத் தீர்மானம் நிறைவேற்றிய பின்னர் நகராட்சி நிர்வாக ஆணையரால் நகராட்சி மற்றும் மாநகராட்சியின் நிதி நிலைமையை பரிசீலித்து தேவையான பணியிடங்களை தோற்றுவிக்க அனுமதி அளிக்கப்படும்.

(3)இப்பணியிடங்களில் வேலைவாய்ப்பகம் மூலம் பட்டியல் பெற்று விதிமுறை-களின்படி பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

(4)புதியதாக நியமனம் செய்யப்படும் மின்கம்பியாளர்(Wireman) மாதம் ரூ.2000/- என்ற தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட வேண்டும். இத்தொகுப்பூதியம் ஒவ்வொரு ஆண்டும் 5 சதவிகிதம் கூடுதலாக்கப்படும்.

(5)புதியதாக நியமனம் செய்யப்படும் உதவியாளர்(Helper) மாதம் ரூ.1700/- என்ற தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட வேண்டும். இத்தொகுப்பூதியம் ஒவ்வொரு ஆண்டும் 5 சதவிகிதம் கூடுதலாக்கப்படும்.

(6)புதியதாக நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் முதலில் ஒரு ஆண்டு காலத்திற்கு மட்டும் நியமனம் செய்யப்பட வேண்டும். பின்னர் ஒவ்வொரு ஆண்டு காலத்திற்கும், இந்நியமனத்தை புதுப்பித்து தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு நியமனம் செய்யப்பட வேண்டும். மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் இப்பணியாளர்களின் செயலாக்கத்தை மதிப்பீடு செய்து இவர்களை ஊதிய ஏற்றமுறையில் நியமனம் செய்யப்பட வேண்டுமா என்பது குறித்து அரசு பரிசீலித்து ஆணையிடும்.

3.நகராட்சிகளில் தற்போது தினக்கூலியாக பணிபுரியும் 75 மின்கம்பியாளர்கள் மற்றும் 50 உதவியாளர்களை புதியதாக தோற்றுவிக்கும் பணியிடங்களில் தொகுப்பூதியத்தில் பின்வரும் அடிப்படையில் நியமனம் செய்யப்பட வேண்டும்.

(1)வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு நீண்ட காலமாக பணியாற்றிவரும் தினக்கூலிப் பணியாளர்களை முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யலாம்.

(2)வேலை வாய்ப்பகத்தில் பதிவுசெய்து, ஆனால் வேலைவாய்ப்பகம் மூலம் தேர்ந்தெடுக்கப்படாமல் பணியாற்றிவரும் தினக்கூலிப் பணியாளர்களை அவர்கள் வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ள முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யலாம்.

(3) வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யாமல், தினக்கூலியாக பணியாற்றுபவர்களை அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்ய அறிவுறுத்தி பதிவு செய்தபின்னர் அப்பதிவின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து நியமனம் செய்யப்பட வேண்டும்.

(4) பணியிடங்களுக்கென வரையறுக்கப்பட்டுள்ள தேவையான கல்வித்தகுதி மற்றும் தொழில்நுட்பத் தகுதி ஆகியவற்றைக்கொண்டுள்ள நபர்களை மட்டுமே மேற்சொன்ன வழிமுறைகளில் பணிநியமனம் செய்யப்பட-வேண்டும்.

4. இந்த அரசாணை நிதித்துறை மற்றும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் ஒப்புதலுடன் முறையே அ.சா.எண்.1177(நிதி(செ)/பி/98 நாள் 21.3.98 மற்றும் அ.சா.எண்.88/செ(தொ.வே.வா)/பி/98 நாள் 12.4.98-ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி
அரசுச் செயலாளர்.

பெறுநர்.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை.5
ஆணையர், மதுரை/கோயம்புத்தூர்/திருச்சிராப்பள்ளி/திருநெல்வேலி/
சேலம் மாநகராட்சி
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை.108
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(மாந.4/மாந.5/பொது) துறை, சென்னை.9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ஆ. அண்ணாமலை
பிரிவு அலுவலர். 8/5/98